இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 31-12-2024

# ‘பொள்ளாச்சி’ பழனிசாமிக்கு....

**எடப்பாடி பழனிசாமி, தான் ஒரு ‘பொள்ளாச்சி’ பழனிசாமி என்பதை மறந்து அறிக்கைகள் விடுவதும், போராட்டம் நடத்துவதும், பேட்டிகளில் கனைப்பதுமாக வலம் வந்து கொண்டிருக்கிறார்.**

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மாணவி ஒருவர் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டார். ஒரே நாளில் இதன் உண்மைக் குற்றவாளி ஞானசேகரன் என்பவர் கைது செய்யப்பட்டார். இதில் என்ன குறை கண்டார் பழனிசாமி?

குற்றத்தை மறைத்திருந்தாலும், குற்றவாளியைக் கைது செய்யாமல் விட்டிருந்தாலும் பழனிசாமி குறை சொல்லலாம். உடனடியாக குற்றவாளி கைது செய்யப்படுகிறார். குற்றச் சம்பவத்தை மறைக்கும் செயல் எங்குமே நடக்கவில்லையே!

**பாதிக்கப்பட்ட பெண் புகார் அளித்ததும், உடனடியாக எப்.ஐ.ஆர். எனப்படும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அவருக்கும் அந்த அறிக்கை தரப்பட்டது. நான்கு தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. ஞானசேகரன் என்பவருக்கு இதில் தொடர்பு இருப்பதற்கான தடயங்கள் இருப்பதைக் கண்டுபிடித்ததும் அந்த நபர் கைது செய்யப்பட்டார். இவை அனைத்தும் 24 மணி நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகும்.**

அண்ணா பல்கலைக் கழகத்தில் 70 கேமராக்கள் உள்ளது. அதில் 56 கேமராக்கள் இயங்குகிறது. அதில் பதிவான காட்சிகளை வைத்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு வீடியோ காலில் ஞானசேகரனை காவல் துறை காட்டி உறுதி செய்து விட்டது. அதன்பிறகும் பழனிசாமி, ‘கிரிமினல் சைட்’ லாயர் போல கேள்விகளைக் கேட்டுக் கொண்டு இருக்கிறார்.

“யாரோ ஒருவரை சார் என்று சொல்லி இருக்கிறார் குற்றவாளி. யார் அந்த சார்?” என்று கேட்கிறார் பழனிசாமி. அதற்கும் சென்னை மாநகர ஆணையர்பதில்அளித்துவிட்டார். “இதுவரைநடைபெற்றபுலனாய்வின்படி ஞானசேகரன் ஒருவர்தான் குற்றவாளி. சம்பவம் நடந்தபோது ஞானசேகரன் ஒருவருடன் கைப்பேசி மூலமாக பேசியதாக தகவல் பரவுகிறது. ஆனால் அது உண்மை அல்ல. சம்பவம் நடந்த போது கைப்பேசியை ‘ஏரோபிளேன் மோடில்’ ஞானசேகரன் வைத்துள்ளார். அவர் மாணவியை மிரட்டுவதற்கும், பயமுறுத்துவதற்கும் பொய்யாக கைப்பேசி மூலம் ஒருவரிடம் பேசுவதுபோல் நாடகமாடியுள்ளார்” என்று விளக்கம் அளித்துள்ளார் ஆணையர்.

முதல் தகவல் அறிக்கை தவறுதலாக வெளியாகி விட்டது. இது தொடர்பாக தனியாக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு செய்தியையும் நுணுக்கமாக ஆராய்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருகிறது தமிழ்நாடு காவல் துறை. ஆனால் பழனிசாமி இதில் அரசியல் லாபம் தேடுவதற்காக போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்.

**இந்த ‘யோக்கிய சிகாமணி’ ஆட்சியில் நடைபெற்ற பொள்ளாச்சி சம்பவத்தில் என்ன செய்தார்? எப்படி நடந்து கொண்டார்?**

பொள்ளாச்சியில் பாதிக்கப்பட்ட ஒரு பெண், இந்தச் சம்பவம் குறித்து தனது அண்ணனிடம் சொல்கிறார். அவர் பிரச்சினைக்குரிய நபர்கள் நான்கு பேரை அடையாளம் கண்டு அடித்துவிடுகிறார். இந்த நான்கு பேரையும் அவரே பிடித்துக் கொண்டு வந்து பொள்ளாச்சி டவுன் காவல் நிலையத்திலும் ஒப்படைக்கிறார். வீடியோக்கள், செல்போன்களையும் தருகிறார். இதனைப் பெற்றுக்கொண்ட பழனிசாமி ஆட்சி போலீசார், வழக்கு பதியவில்லை. அனைவரையும் விடுவித்து விட்டனர். இந்தப் புகாரை அப்படியே ‘குற்ற’ தரப்புக்கு கொடுத்து விடுகிறார்கள். இந்த இடத்தில் அ.தி.மு.க. பிரமுகர் பார் நாகராஜன் என்பவர் வருகிறார். அவர், பாதிக்கப்பட்ட பெண்ணின் அண்ணனை தாக்குகிறார்.

இதன்பிறகு தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிக்கை வெளியிட்டார். தி.மு.க. மகளிரணிச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் பொள்ளாச்சியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. மூன்று பேரைக் கைது செய்து கணக்குக் காட்டி முடிக்கப் பார்த்தார் பழனிசாமி. முக்கியமான குற்றவாளியான திருநாவுக்கரசுவைக் கைது செய்யவில்லை. இதனை சுட்டிக்காட்டி தி.மு.க. தலைவர் அறிக்கை வெளியிட்டார்கள். இது பற்றி முதலமைச்சர் பழனிசாமியிடம் கேட்டபோது, ‘அ.தி.மு.க.வினருக்கு இதில் தொடர்பு இருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருந்தால் கொடுங்கள்’ என்று கேட்டார்.

**இந்த குற்றத்தில் தொடர்புடையவர்களுக்கும் அ.தி.மு.க. பிரமுகர்களுக்குமான தொடர்பை ‘நக்கீரன்’ இதழ் வெளியிட்டது. நக்கீரன் நிருபரை, எடப்பாடி பழனிசாமி பேரைச் சொல்லியும், அன்றைய அமைச்சர் வேலுமணி பேரைச் சொல்லியும்தான் மிரட்டினார்கள். இதனை அப்போதே நக்கீரன் இதழ் வெளியிட்டுள்ளது. விசாரணை என்ற பெயரால் தடயங்களை மறைத்தது பழனிசாமி அரசு. பின்னர் வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டது.**

**பொள்ளாச்சி சம்பவமே அ.தி.மு.க. பிரமுகர்களால் தான் நடந்தப்பட்டது என்பதை சி.பி.ஐ. உறுதி செய்தது. அருளானந்தம், பாபு, கரோன்பால் ஆகிய மூவர் கைது செய்யப்பட்டார்கள். இந்த மூவரும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள். அருளானந்தம் என்பவர் அ.தி.மு.க. மாணவரணி செயலாளராக இருக்கிறார். அன்றைய அமைச்சர் வேலுமணியின் கைத்தடியாக வலம் வந்துள்ளார். வேலுமணியுடன் பல்வேறு விழாக்களில் பங்கெடுத்துள்ளார். அதேபோல், பொள்ளாச்சி ஜெயராமனுடன் இருக்கிறார். பல்வேறு நிகழ்ச்சிகளில் ஜெயராமனுடன் இருந்துள்ளார். ஜெயராமன் பேட்டி கொடுக்கும் போதெல்லாம் அவரோடு அருளானந்தம் உள்ளார். அ.தி.மு.க.வின் சுவரொட்டிகளில் அருளானந்தம் படம் இடம்பெற்றுள்ளது. அதேபோல் பாபு, கரோன்பால் ஆகிய இருவரும் பொள்ளாச்சி ஆச்சிடிபட்டி ஊராட்சித் தலைவரும் அ.தி.மு.க. பிரமுகருமான ரெங்கநாதனுடன் நெருக்கமாக இருந்துள்ளார்கள். இவர்கள் படங்களும் சமூக வலைத்தளங்களில் பரவியது. இப்படி கைதான மூவரும் அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள்.**

இவர்களைக் காப்பாற்றுவதற்காகத்தான் இப்படி ஒரு சம்பவமே நடக்காதது போல நாடகம் ஆடியது அன்றைய அ.தி.மு.க. அரசு. சம்பவம் வெளியே தெரிந்ததும், பார் நாகராஜனை கட்சியை விட்டு நீக்கினார் பழனிசாமி. கட்சியை விட்டு நீக்கிய மறுநாளே மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்குச் சென்று துணிச்சலாக பேட்டி கொடுத்தார் பார் நாகராஜன்.

**இதையெல்லாம் மக்கள் மறந்திருப்பார்கள் என்று நினைத்து பேட்டி கொடுத்துக் கொண்டிருக்கிறார் பழனிசாமி. வெட்கமாக இல்லையா?**



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (29.12.2024) மாலை, தூத்துக்குடியில் நடைபெற்ற தூத்துக்குடி மாவட்டக் கழகங்களின் நிர்வாகிகளுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026–ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார். இந்நிகழ்ச்சி நிறைவுற்றதும் அது குறித்து வலைதளத்தில் பதிவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **“வீரத்தின் விளைநிலமாம் தூத்துக்குடி மண்ணில், களப்பணியாற்றும் கழக வீரர்கள் ‘களம் 2026’ இல் மீண்டும் கழக ஆட்சி அமைத்திட உறுதியேற்றோம்! தங்களுக்குட்பட்ட வாக்குச் சாவடிகளில் கழகத்துக்குப் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கப் பாடுபட்டு வரலாறு படைப்போம் எனக் கழக நிர்வாகிகள் உறுதியளித்தனர்”**எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

### 600 தகவல் தொழில்நுட்ப வல்லுனர்கள் பணிபுரியும் வகையில் ரூ.32.50 கோடி செலவில்

# தூத்துக்குடி மாவட்டம் - மீளவிட்டானில் ‘மினி டைடல்’ பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**தூத்துக்குடி, டிச. 31 –**

**தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டானில் சுமார் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் ரூ.32.50 கோடி செலவில் அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, நிறுவனங்களுக்கு இடஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.**

அதன் விவரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.12.2024) தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டானில் சுமார் 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் 32.50 கோடி ரூபாய் செலவில் 63,000 சதுர அடி பரப்பளவில் அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை திறந்து வைத்தார். மேலும், இம்மினி டைடல் பூங்காவில் Protogrowth Inc மற்றும் Pro1 Health Systems ஆகிய நிறுவனங்களுக்கு இடஒதுக்கீட்டிற்கான ஆணைகளை வழங்கினார்.

இந்தியாவிலேயே, மின்னணு சாதனங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்கி வருவதோடு, நாட்டிலேயே இரண்டாவது பெரிய பொருளாதாரமாகவும் திகழ்கிறது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்குப் பார்வையுடன் சென்னை ராஜீவ் காந்தி சாலையில் டைடல் பூங்கா அமைத்தது தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பப் புரட்சி ஏற்பட அடித்தளமாக அமைந்தது. இவ்வரசு பொறுப்பேற்றவுடன் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது மாநிலம் முழுவதும் பரவலாக அமைவதை உறுதி செய்திட, முதற்கட்டமாக விழுப்புரம், வேலூர், திருப்பூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும் என்று 2021 - 2022ஆம் ஆண்டிற்கான திருத்த வரவுசெலவுத்திட்ட அறிக்கையில் அறிவிக்கப்பட்டது.

**திறந்து வைக்கப்பட்ட மற்றும் அடிக்கல் நாட்டப்பட்ட மினி டைடல் பூங்காக்கள் குறித்த விவரங்கள்**

விழுப்புரம் மாவட்டம், திருச்சிற்றம்பலம் கிராமத்தில் 31 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட மினி டைடல் பூங்கா 17.2.2024 அன்றும், தஞ்சாவூர் மாவட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் 30.50 கோடி ரூபாய் செலவிலும், சேலம் மாவட்டம், கருப்பூர் கிராமம், ஆணைக்கவுண்டன்பட்டியில் 29.50 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்பட்ட மினி டைடல் பூங்காக்கள் 23.9.2024 அன்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டன. மேலும், வேலூர் மாவட்டம், மேல்மொனவூர் அப்துல்லாபுரத்தில் 30 கோடி ரூபாய் செலவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 18.02.2023 அன்றும், திருப்பூர் மாவட்டம் ராக்கியாபாளையத்தில் 44 கோடி ரூபாய் செலவில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 24.6.2022 அன்றும் முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அதன் கட்டுமானப்பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

**தூத்துக்குடி, மினி டைடல் பூங்கா திறந்து வைத்தல்**

தூத்துக்குடி மாவட்டம், மீளவிட்டான்-II பகுதியில் 4.16 ஏக்கர் நிலப்பரப்பளவில் 32 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 63,000 சதுர அடி பரப்பளவில் அடித்தளம் மற்றும் 4 தளங்களுடன் மினி டைடல் பூங்கா கட்டுவதற்கு 19.05.2023 அன்று முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

இப்பணியானது மிகக் குறுகிய காலத்திலேயே நிறைவடைந்து அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மினி டைடல் பூங்கா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டடத்தில் குத்தகைக்கு விடப்படக்கூடிய பகுதியான 50,937 சதுர அடி முழுவதும் நிறுவனங்களுக்கு திறந்து வைக்கப்பட்ட இன்றைய தினமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், தகவல் தொழில்நுட்ப துறையில் தூத்துக்குடி மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் படித்த இளைஞர்கள் குறிப்பாக பெண்கள் அதிக வேலைவாய்ப்பு பெறுவதுடன், அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

இந்நிகழ்ச்சியில், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சமூக நலம் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன், மீன் வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் வி. மார்க்கண்டேயன், சி.சண்முகய்யா, தூத்துக்குடி மாநகராட்சி மேயர் பி.ஜெகன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் எல்.மதுபாலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### தூத்துக்குடி மாவட்டத்தில் – உடன்குடி அனல்மின் நிலையப் பணிகள், சர்வதேச அறைகலன் பூங்கா –

# தாமிரபரணியை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் - வெள்ளத் தடுப்புப் பணிகள்!

## பணிகளை விரைந்து முடித்திட – முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**தூத்துக்குடி, டிச. 31 –**

**தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும், உடன்குடி அனல் மின் நிலையப் பணிகள், சர்வதேச அறைகலன் பூங்கா, தாமிரபரணி நதியினை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக்குடிநீர் திட்டம், வெள்ளத் தடுப்புப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆய்வு பணிகளை விரைவு முடித்திட மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (29.12.2024) தூத்துக்குடியில் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் முத்திரைத் திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகள், வெள்ளத் தடுப்புப் பணிகள், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகள், சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், ஆகியவற்றின் தற்போதைய நிலை குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முத்திரைத் திட்டங்களான உடன்குடியில் ரூ.13077 கோடி மதிப்பீட்டில் 1320 மெகாவாட் (2 x 660 MW) அனல்மின் நிலையப் பணிகள், ரூ.1000 கோடி மதிப்பீட்டில் சர்வதேச அறைகலன் பூங்கா அமைக்கும் பணிகளில், சாலை வசதி மற்றும் மேம்பாட்டு பணிகள் முடிவுற்ற நிலையில், தற்போது நடைபெற்று வரும் தண்ணீர் விநியோகத்திற்கான பணிகள், ஓட்டப்பிடாரம் வட்டம், தெற்கு வீரபாண்டியபுரம் கிராமத்தில் புதிய தொழிற்பூங்கா அமைப்பதற்காக பணியின் நிலை, தூத்துக்குடி மாவட்டத்தில் தாமிரபரணி நதியினை நீராதாரமாகக் கொண்டு ரூ.515.72 கோடி மதிப்பீட்டில் 363 குடியிருப்புகளுக்கான கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை, திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.306 கோடி மதிப்பீட்டில் தனியார் பங்களிப்புடன் நடைபெற்று வரும் பணிகள் ஆகியவற்றை குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியருடன் ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட உத்தரவிட்டார்.

மேலும், இக்கூட்டத்தின்போது, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாவட்டத்தில் 2,75,307 குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1000/ உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்றும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ், அரசுப் பள்ளிகளில் நாளொன்றுக்கு சராசரியாக 15,262 மாணவர்களும், அரசு உதவி பெறும் பள்ளிகளில், நாளொன்றுக்கு சராசரியாக 16,363 மாணவர்களும், என மொத்தம் 31,625 மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர் என்றும், புதுமைப் பெண் திட்டத்தின் கீழ், 3,381 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/ பெற்று வருகின்றனர் என்றும், நாளை முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று உயர்கல்வி பயிலும் 4680 மாணவிகளும் புதுமைப் பெண் விரிவாக்கத் திட்டத்தின் மூலம் பயன்பெறுவர் என்றும், விடியல் பயணம் திட்டத்தின் கீழ், இதுவரை இந்த மாவட்டத்தில் உள்ள பெண்களால் 5.37 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனர் என்றும்,

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் 2023 24 ஆம் ஆண்டில் 16,793 சுய உதவி குழுக்களுக்கு 991.10 கோடி ரூபாய் கடனுதவியாக வழங்கப்பட்டுள்ளது என்றும், மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்விற்காகவும், அவர்கள் சுயமாக செயல்படவும், கடந்த 3 ஆண்டுகளில், 5.23 கோடி ரூபாய் மதிப்பிலான மின் கலனால் இயங்கும் சக்கர நாற்காலி, இணைப்புச்சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், காதொலிக் கருவிகள் போன்ற பல்வேறு உதவி உபகரணங்கள் 1571 மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

அதேபோன்று, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் ஓய்வூதியம், ஆதரவற்றோர் விதவைகள் ஓய்வூதியம், மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் போன்ற பல்வேறு ஓய்வூதிய திட்டங்களின் கீழ் 47210 பயனாளிகளுக்கு மாத ஓய்வூதிய வழங்கப்பட்டு வருவதோடு, நான் முதல்வன் திட்டத்தின் கீழ், கடந்த இரண்டு ஆண்டுகளில் 47,251பொறியியல், கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு அதில் 1415 மாணவர்கள் வேலைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்றும், கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்டத்தில் 43 வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு நிறுவனங்களால் இதுவரை 4425 நபர்களுக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

**தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத் தடுப்புப் பணிகள்!**

இந்த ஆய்வு கூட்டத்தின் போது, முதலமைச்சர் அவர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் 17.12.2023 மற்றும் 18.12.2023 ஆகிய நாட்களில் பெய்த அதிகனமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புகள் குறித்தும், மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 592 தற்காலிக வெள்ள சீரமைப்பு பணிகள் ரூ.67.81 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளது என்றும், 155 நிரந்தர வெள்ள சீரமைப்புப் பணிகள் முதலமைச்சர் அவர்களால் 27.02.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு அவற்றில் தற்பொழுது 101 பணிகள் முடிவுற்று, மீதமுள்ள 54 பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார். வெள்ளத் தடுப்புப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டார்.

மேலும், மாவட்டத்தில் உள்ள கள அலுவலர்கள் அரசால் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள் யாவும் அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் சுணக்கமின்றி உரிய வகையில் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றவா என்பதை நேரடி கள ஆய்வுகள் மூலம் கண்காணித்து உறுதி செய்ய வேண்டும் எனவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அரசுத் துறைகள் பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகளும் விண்ணப்பம் பெறப்பட்டவுடன் உரிய காலத்தில் தாமதமின்றி வழங்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மாவட்ட ஆட்சித் தலைவர் இளம்பகவத், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் எல்.மதுபாலன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.